31

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இருபாவிருபஃதுமூலமும்
உண்மைவிளக்கமூலமும்.

இவை

சாக்கிர் ஆரணி

மகா-ள-ள-ஸ்ரீ

காசி-நாராயணசாமிமுதலியாரவர்களும்

ஷை ஊர் சந்நியாசி

மகா-ள-ஸ்ரீ-குப்புசெட்டியாரவர்களும்

பலகால்வேண்டிக்கொண்டபடி

திரிசிரபுரம்.

வித்வான்

மதுரைநாயகம்பிள்ளையவர்களாற்

பிழையறப்பரிசோதித்து,

சென்னபட்டணம்.

ஷ புஷ்பரதச்செட்டியாரவர்களது

கலாரத்நாகரம்

என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

Registered Copyright.

1867.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இருபாவிருபஃது மூலமும்.

உண்மைவிளக்கமூலமும்.

இவை

சாக்கிர் ஆரணி

மகா-ரா-ரா-ஸ்ரீ

காசி-நாராயணசாமிமுதலியாரவர்களும்

ஷை ஊர் சந்நியாசி

ம-ரா-ஸ்ரீ குப்புசெட்டியாரவர்களும்

பலகால்வேண்டிக்கொண்டபடி

திரிசிரபுரம்.

வித்வான்

மதுரைநாயகம்பிள்ளையவர்களாற்

பிழையறப்பரிசோதித்து,

சென்னபட்டணம்.

ஊ. புஷ்பரதச்செட்டியாரவர்களது

கலாரத்நாகரம்

என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இருபாவிருபஃதுமூலம்.

கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும்— வெண்ணெநல்லூர்
மெய்கண்டா னென்றொருகான் மேவுவரால் வேறின்மை
கைகண்டா ருள்ளத்திற் கண். (க)

கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் றானென
வெண்ணெத் தோன்றிய மெய்கண்ட தேவ
காராகிரகக் கலியாழ்வெனைநின்
பேரா வின்பத் திருத்திய பெரும
வினவ லானு துடையே னெனதுள
நீங்காநிலைமை யூங்குமுளையா
லறிவின்மைமலம் பிரிவின்மையெனி
னொராலினையுணர்த்தும்விராய்நின்றனையேற்
றிப்பியமந்தோ பொய்ப்பகையாகாய்
சுத்தனமலன் சோதிநாயகன்
முத்தன்பரம்பர னெனும்பெயர்முடியா
வேறுநின்றுணர்த்தின்வியாபகமின்றாய்ப்
பேறுமின்று மெமக்கெம்பெரும
விருநிலந்தீநீ ரியமானன் காலெனும்
பெருநிலைத்தாண்டவம் பெருமாற்கிலாதலின்
வேறேவுடனே விளம்பல்வேண்டுஞ்
சீறியருளல் சிறுமையுடைத்தா
லறியாதுகூறினை யபக்குவபக்குவக்
குறிபார்த்தருளினங் குருமுதலாயெனி

னுளம்வெளிசெய்துன் னளவில்காட்சிக்
காட்டியெற்காட்டினை யெனினே நாட்டியெ
னுண்மையும் பெருமையு நுவலி னண்ணல்
பாதாளசத்தி பரியந்த மாக
வோதியுணர்ந்த யானேயேக
முழுத்துநின்றனன் முதல்வமுழுத்தும்
புலன்கடைப்புழை நுழைந்தனன்கலங்கி
யாங்கைந்தவத்தையு மடைந்தனனீங்கிப்
போக்குவரவு புரிந்தனன்றூக்கி
யெவ்விடத்துண்மையு மிவ்விடத்தார்தலுஞ்
செல்லிடத்தெய்தலுந் தெரித்தமூன்றினு
ளொன்றெனக்கருளல் வேண்டுமென்று
மில்லதிலதா யுள்ளதுளதெனுஞ்
சொல்லேசொல்லாய்ச் சொல்லுங்காலைச்
சிறுத்தலும்பெருத்தலு மிலவேசிறுத்தி
யானையெறும்பீருனது போலெனின்
ஞானமின்றவை காயவாழ்க்கை
மற்றவையடைந்தன வுளவெனிற்றனது
விட்டகுறையி னறிந்துதொன்று
தொட்டுவந்தனவென வேண்டுநட்ட
பெரியதிற்பெருமையுஞ் சிறியதிற்சிறுமையு
முரியதுநினக்கே யுண்மைபெரியோ
யெனக்கின்றுருகு மென்று
மநக்கினியாயினி மற்றதுமொழியே. (கா)

மொழிந்தவவத்தை முதலடியேனின்றுங்
கொழிந்தனனுன்கு முணர—விழிந்ததிந்
தேதிற்றிங்கில்லை யெழில்வெண்ணை மெய்த்தேவே
தேறிற்றென்கொண்டு தெரித்து. (எ)

தெரித்ததென்கொண்டனை யுருத்திரபசுபதி
செடியனேனையு மடிமைசெய்யப்
படிவங்கொண்டு வடிவுகாட்டில்லாப்
பெண்ணையாளும் வெண்ணைமெய்ய
வவத்தையிற்றெரித்தன னாயினவத்தை
தெரித்தாங்கிருத்தலு மிலனேதிருத்துங்
காலமுதலிய கருவியாயின்
மாலும்பிரமனும் வந்தெனையடையா
ரோதுங்காலை யொன்றையொன்றுணரா
சேதநமன்றவை பேதச்செயலாற்
சேதநவானாற் செயல்கொளவேண்டுநற்
போதமிவற்றைப் புணர்வதுமறியேன்
கருவித்திரளினுங் காண்பதோரொன்று
மொருவுவதறியே னுணர்விலனாதலி
னிற்கொடுகண்டன னாயினெற்குக்
கருவியாயினை பெருமையுமிலையே
யானேபிரமங் கோனேவேண்டா
வின்னுங்கேண்மோ மன்னநின்னின்
முன்னமென்ற னுணர்விலனாதலி
லென்னைக்காண்பினுங் காண்பலகாணா
துன்னைக்காண்பினுங் காண்பலவுன்னோ
டொருங்குகாண்பினுங் காண்பலவருந்துணைக்
கண்டவா றேதெனதுகண்ணே
யண்டவாண வருட்பெருங்கடலே. (அ)

கடலமுதே வெண்ணைக் கரும்பேயென் கண்ணே
யுடலகத்து மூலத் தொடுங்கச்—சடலக்
கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னென்னை
மருவியா தென்றுரைக்க மன். (கூ)

மன்னியகன்மச் சமத்திடைமலங்களே ;
யன்னியமாக்கி யருள்வழியதனு
லென்னுள்புகுந்தனே யெனினேமுன்னேத்
திரிமலந்தீர்த்த தேசிகநின்ளுே
டொருவுதலின்றி யுடந்தையேயாகும் ;
பெருநிலையாகல் வேண்டுமெருவிடு
மும்மலமதனு லெம்முணின்றிலேயெனி
னம்மலத்திரிவுஞ் செம்மலர்த்தாணிழற்
சேர்தலுமிலவாய்ச் சார்பவைபற்றிப்
பேர்விலனுகும் பெருமதீர்வின்
றமைந்தகருமத் தியைந்ததையல்லது
சமைந்தனவிலவெனச் சாற்றினமைந்த
மாயேயங்கன்ம மாமலமூன்று
மாயாதாகவே யார்ச்சநமாயையி
னுற்பவந்திரா தொழுகுமொன்ருென்றி
னிற்சமமாயினல்லதுநிற்பெற
லில்லெனமொழிந்த தொல்லறந்தனக்கு
மேயாதாகு நாயேனுளத்து
நின்றனேயென்பளுே நின்றிலேயென்பளுே
பொன்றியபொன்றிற் றிலமலமென்பளுே
வொன்றினேயுரைத்தருண் மன்றகுன்ருப்
பெண்ணேப்புனல்வயல் வெண்ணேக்கதிபதி
கைகண்டலேவாய் கால்செவிமூக்குயர்
மெய்கொண்டென்வினே வேரறப்பறித்த
மெய்கண்டதேவ விணேயிலி
மைகொண்டகண்ட வழுவிலென்மதியே. (ம)

மதிநின்பா லிந்த மலத்தின்பா னிற்க
விதியென்கொல் வெண்ணெ வாழ்மெய்ய—பதிநின்பால்
வந்தா லிதில்வரத்தில் வந்திரண்டும் பற்றுகிலேன்
எந்தா யிரண்டாமா றென். (௰க)

எண்டிசைவிளங்க விருட்படாம்போக்கி
முண்டகமலர்த்தி மூதறிவருளு
மேதினியுதய மெய்கண்டதேவ
கோதிலமுத குணப்பெருங்குன்ற
வென்னினைர்தலு மகறலுமென்னைகொ
லுன்னிற்றுன்னி யுனைவிடிற் பெயர்குவை
யென்னுமதுவே நின்னியல்பெனினே
வியங்கொளாளனு மாகியியங்கலு
முண்டெனப்படுவை யெண்டோண்முக்கண
யாங்கணும்பிரியா தோங்குநின்னிலையின்
யான்வந்தணைந்து மீள்குவனுயி
ஞற்றுத்துயருற்ற ரணிநிழனைசை இ
வீற்றுவீற்றெழுதா வேண்டலும்வெறுத்தலு
மின்றிச்சாயைக்கு நன்றுமன்னியல்பே
யனையையாகுவை நினைவருங்காலை
யிந்நிலையதனி னேழையேற்கிரங்கி
நின்னைவெளிப்படுத் தொளிப்பைநீயே
லருண்மாருகும் பெருமவஃதன்றியு
நிற்பெற்றவர்க்கு முற்பவமுண்டெனுஞ்
சொற்பெறுமஃதித் தொல்லுலகில்லை
யவ்வவ்வமைவுஞ் சோர்வுமயர்வறச்
சொல்லிற்சொல்லெதிர் சொல்லாச்
சொல்லேசொல்லுகசொல்லிறந்தோயே. (௰உ)

இறந்தோய் கரணங்க ளெல்லா மெனக்குச்
சிறந்தோ யெனினுமெய்த் தேவே—பிறந்துடனுங்
காயங் கொளவுங் கொளாமலுங் கண்டதுநீ
யாயன்கொல் பாதவத் தற்று. (யஙு)

அற்றதென்பாச முற்றதுன்கழலே
யருட்டுறையுறையும் பொருட்சுவைநாத
வேறென்றிருந்த வென்னையான்பெற
வேறின்மைகண்ட மெய்கண்டதேவ
விருவினையென்ப தென்னைகொலருளிய
மநமேகாயம் வாக்கெனுமூன்றி
னிதமேயகித மெனுமிவையாயின்
கணத்திடையழியுந் தினைத்துணையாகா
காரணஞ்சடமதன் காரியமஃதா
லாரணங்காம்வழி யடியேற்கென்னைகொல்
செயலெனதாயினுஞ் செயலேவாரா
வியமன்செய்தி யிதற்கெனினமைவும்
பின்னையின்றகு மன்னதுமிங்குச்
செய்திக் குள்ள செயலவையருத்தின்
மையறிரியமற்குவழக்கில்லைமன்ன
வொருவரோயவைமயு மொருவவொருவற்
கிருவரும்வேண்டா விறைவனுநின்றனை
நின்னதுகருணை சொல்லளவின்றே
யமைத்ததுதுய்ப்பி னெமக்கணைவின்று
முள்ளதுபோகா தில்லதுவாரா
துள்ளதேயுள்ள தெனுமுறையதனாற்
கொள்ளும்வகையாற் கொளுத்திடுமாயின்
வள்ளமையெல்லா முள்ளிடவமையு
மீயவேண்டு மெனும்விதியின்று

மாயினுமென்னை யருந்துயர்ப்படுத்து
நாயினேற்கு நன்றுமன்மாயக்
கருமமுங்கரும பந்தமுந்
தெருளவருளு சிவபெருமானே. (௰௪)

மானமருஞ்செங்கை மதில்வெண்ணைவாழ்மன்ன
போனவினை தானே பொருந்துமோ—யானதனி
லாவனோவாக்கா யமலனுநின்னருடான்
றேவனேயாதுக்கோ தேர், (௰௫)

தேராதுரைப்பன் றெருமரலுளத்தொடு
பேராதருளுதல் பெரியோர்கடனே
நின்னைக்கலப்ப தென்னுண்மையெனி
னின்னதுநேர்மை சொன்மநத்தின்றே
யெழுவகைத்தாதுவி னெழுதுளையிரண்டும்
பெருமுழைக்குரம்பையிற் பெய்தகத்தடக்கி
நீக்கியென்றனைப் போக்கறநிறுத்தி
யிச்சைமுதலிய வெழுப்பிநடத்திடும்
விச்சைசால வியப்பிதுநிற்க
வாக்குமநமும் போக்குளதநுவுஞ்
சொல்லுநினைவுஞ் செய்யுஞ்செயலு
நல்லவுந்தீயவு மெல்லாமறிந்து
முறைபிறழாமற் குறைவுநிறைவின்றுய்க்
காலமுந்தேசமு மாலறவகுத்து
நடுவுநின்றருத்தலி னடுவனுகுதியே
சான்றோர்செய்தி மான்றிருப்பின்றே
சாலார்செயலே மாலாகுவதே
யத்துவாமெத்தி யடங்காவினைகளுஞ்
சுத்திசெய்தனையே யொத்தகன்மத்திடை

நீங்கினவென்னை யூங்கூழ்வினைகளு
மாங்கவையருத்துவ தாரைகொலதனுற்
கருமமருத்துங் கடனதுவின்றுந்
தருமம்புரத்தல் பெருமையதன்றே
கண்ணினுண்மணிய கருத்தினுட்கருத்த
வெண்ணைவேந்த மெய்கண்டதேவ
விடர்ப்படுகுரம்பையு ணிருத்தித்
துடைப்பதில்லாவரு டோன்றிடச்சொல்லே (௰சு)

சொற்றெழும்புகொள்ளநீ சூழ்ந்ததுவுநிற்செயல்கண்
மற்றவர்கணின்னேக்கின் மாய்ந்தவுயிர்க்—குற்றங்
கொளித்தியாங்கைய வுயர்வெண்ணைநல்லூர்க்
குளித்தமதுக் கொன்றையெங்கோ (௰எ)

கோலங்கொண்ட வாறுணராதே
ஞாலங்காவல னியானெனக்கொளீஇப்
பொய்யைமெய்யெனப் புகன்றுவையத்
தோடாப்பூட்கை நாடிநாடா
வென்னுட்கரந்தென் பின்வந்தருளி
யென்னையுந்தன்னையு மறிவின்றியற்று
மென்னதியானெனு மகந்தையுங்கண்
டியாவரியாவையு மியாங்கணுஞ்சென்று
புக்குழிப்புக்குப் பெயர்த்துழிப்பெயர்த்து
மிக்கபோகம் வினையால்விளைத்திட்
டெற்பணியாளா யெனைப்பிரியாதே
யோடிமீள்கென வாடல்பார்த்திட்
டென்வழிநின்றன னெந்தையன்றே
வருண்மிகவுடைமைபி னருட்டுறைவந்து
பொருண்மிகவருடலும் பொய்ப்பகையாதலுங்

கைகண்டுகொள்ளெனக் கடலுலகறிய
மெய்கண்டதேவ னெனப்பெயர்விரீஇத்
தன்னுட்கரந்து தான்முன்னாகித்
தன்னதுந்தானுமா யென்னையின்றாக்கித்
தன்னையுமென்னையுந் தந்துதனது
செய்யாமையுமெனது செயலின்மையு
மெம்மான்காட்டி யெய்த
லம்மாவெனக்கே யதிசயந்தருமே. (௰அ)

தருமாதருமத் தலைநின்றாழ்வேனைக்
கருமாகடல்விடமுண் கண்டப்—பெருமான்
றிருவெண்ணைநல்லூர்ச் சுவேதவனத்தா
னுருவென்ன வந்தெடுத்தானுற்று (௰௯)

உற்றவர்பெற்றவ ரற்றவர்முற்று
மற்றவர்க்கற்றவ னல்லவர்க்கல்லவ
னந்தமாதி யில்லவன்வந்து
குரக்குமநத்துக் கொடியேன்பரக்கும்
பரப்பைக்குவித்து நிறுத்திப்பிடித்திட்
டிருள்வெளியாகு மருளினையறுத்து
வந்துபுகுதலுஞ் சென்றுநீங்கலு
மின்றியொன்றாய் நின்றவந்நிலையி
லொன்றாகாம லிரண்டாகாம
லொன்றுமிரண்டு மின்றாகாமற்
றன்னதுபெருமை தாக்காதாயினு
மென்னதுபெருமை யெல்லாமெய்தித்
தன்னையெனக்குத் தருவதையன்றியு
மென்னையுமெனக்கே தந்துதன்னது
பேரானந்தப் பெருங்கடலதனு

ளாராவின்ப மளித்துத்திரா
வுள்ளும்புறம்பு மொழிவின்றிநின்ற
வள்ளன்மைகாட்டி மலரடியருளிய
மன்னனெங்கோன் வார்புனற்பெண்ணை
வெண்ணெக்காவலன் மெய்கண்டதேவ
னண்ணலருளா லயத்தனண்ணிய
மலமுதலாயின மாய்க்கு
முலகவுயிர்க்கெல் லாமொருகண்ணே. (உ௰)

இருபாவிருபஃதுமூலம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

உண்மைவிளக்கம்.

வண்மைதருமாகமநூல் வைத்தபொருள்வழுவா
வுண்மைவிளக்க முரைசெய்யத்—திண்மதஞ்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனைப்
பந்தமறப்புந்தியில் வைப்பாம்.

பொய்காட்டிப்பொய்யகற்றிப் போதாநந்தப்பொருளா
மெய்காட்டுமெய்கண்டாய் விண்ணப்பம்—பொய்காட்டா
மெய்யாதிருவெண்ணெ வித்தகாசுத்தவிஞ
வையாநீதான்கேட்டருள். (க)

ஆரூறுதத்துவமே தாணவமேதன்றேதான்
மாருவினையேது மற்றிவற்றின்—வேருகா
நானேதுநீயேது நாதனடமஞ்செழுத்துத்
தானேதுதேசிகனே சாற்று. (உ)

உள்ளபடியித்தை யுரைக்கக்கே ளுன்றனக்கு
வள்ளலரு ளாலன்று வாய்மலர்ந்து—தெள்ளியசி
ராகமங்கள்சொன்ன வடைவிலேயானந்த
யோகநிகழ்புதல்வா வுற்று. (ங)

நாற்கோணம்பூமிபுன னண்ணுமதியின்பாதி
யேற்குமனன் முக்கோண மெப்போது—மார்க்கு
மறுகோணங்கால்வட்ட மாகாயமான்மா
வுறுகாயமாமிவற்றூ லுற்று. (ச)

பொன்பார்புனல்வெண்மை பொங்குமனல்சிவப்பு
வன்கால்கருமைவளர் வான்றூம—மென்பா
ரெழுத்துலவரயவப் பாராதிக்கென்று
மழுத்தமதாய்நிற்கு மது. (ரு)

குறிகுலிசங்கோகனகங் கொள்சுவத்திகுன்று
வறுபுள்ளியாரமுத விந்துப்—பிரிவின்றி
மண்புனறீக்கால்வானம் மன்னுமடைவேயென்
றெண்புதல்வாவாகம மோதும். (சா)

பாராதியைந்திற்கும் பன்னுமதிதெய்வங்க
ளாராயயனாதி யைவரா—மோரோர்
தொழிலிவர்க்குச்சொல்லுங்காற் றோற்றமுதலைந்தும்
பழுதறவேபண்ணுவர்காண் பார். (எ)

படைப்பனயனளிப்பன் பங்கயக்கண்மாயன்
றுடைப்பனுருத்திர ருஞ்சொல்லி—றிடப்பெறவே
என்றுந்திரோபவிப்ப ரீசர்சதாசிவரு
மன்றேயனுக்கிரக ராம். (அ)

மண்கடினமாய்த்தரிக்கும் வாரிகுளிர்ந்தேபதமா
மொண்கனல்சுட்டொன்றிவிக்கு மோவாமல்—வண்கால்
பரந்துசலித் துத்திரட்டும் பாற்கிலாகாய
நிரந்தரமாய்நல்கு மிடம். (க)

உள்ளபடிமாபூதமோதினோ முன்றனக்குக்
கள்ளமிகுமைம்புலனுங் கட்டுரைக்கின்—மெள்ளவே
யோசைபரிச முருவஞ்சுவைநாற்ற
மாசைதருமைம்புலனே யாம். (௰)

ஞானேந்திரியங்க ணன்றுயுரைக்கக்கே
ளூனமிகுமாபூத முற்றிடமா—யீனமிகுஞ்
சத்தாதியையறியுந் தானஞ்செவிதோல்க
ணத்தாலுமூக்கென் றறி. (௰க)

வானிடமாய்நின்றுசெவி மன்னுமொலியதனை
யீனமிகுந்தோல்கா லிடமாக—வூனப்
பரிசந்தனையறியும் பார்வையிற்கண்ணங்கி
யிரவியுரு வங்காணு மே. (௰௨)

நன்றாகநீரிடமாய் நாவிரதந்தானறியும்
பொன்றாமணமூக்குப் பூவிடமாய்—நின்றறியு
மென்றோதுமன்றே யிறையாகமமிதனை
வென்றார்சென்றாரின்ப வீடு. (௰௩)

கண்ணுதலுரைலோதியிடுங் கன்மேந்திரியங்க
ளெண்ணுவசனாதிக் கிடமாக—நண்ணியிடும்
வாக்குப்பாதம்பாணி மன்னுகுதமுபத்த
மாக்கருதுநாளு மது. (௰௪)

வாக்காகா யமிடவாய் வந்துவச னிக்குங்காற்
போக்காருங்காற்றிடமாய்ப் புல்கியன—லேற்கு
மிடுங்கைகுதநீ ரிடமாய்மலாதி
விடும்பாரிடமுபத்தம் விந்து. (௰௫)

அந்தக்கரண மடைவே யுரைக்கக்கேள்
அந்தமனம்புத்தியுட னாங்காரஞ்—சிந்தையிவை
பற்றியநிச்சயித்துப் பல்காலெழுந்திருந்தங்
குற்றதுசிந்திக்கு முணர். (௰௬)

ஓதியிடுநாலாறு முற்றான்மதத்துவமென்
றோதியருணூ லறையுங்காண்—டீதறவே
வித்தியாதத்துவங்க ளேழும்விளம்பக்கே
ளுத்தமனேநன்று யுனக்கு. (௰எ)

காலநியதி கருதுங் கலைவித்தை
யேலவிரா கம்புருட னேமாயை—மாலறவே
சொன்றேமடைவாகச் சொன்னவிவைதன்னுண்மை
யுன்னியுரைக்க நாமுற்று. (௰அ)

எல்லைபலம்புதுமை யெப்போதுநிச்சயித்த
லல்லறருங்கிரியை யான்மாவுக்—கொல்லை
யறிவாசையைம்புலனு மாரவருங்காலங்
குறியாய்மயக்கென்று கொள். (௰௯)

வித்தியாதத்துவங்க ளேழும்விளம்பினேஞ்
சுத்தமாந்தத்துவநீ சொல்லக்கே—ணித்தமாஞ்
சுத்தவித்தையீசுரம்பின் சொல்லுஞ்சாதாக்கியநற்
சத்திசிவங்காணிவை கடாம். (௨௰)

சுத்தவித்தைஞானமிகுந் தொன்மையாமீசுரந்தா
னத்தன்றொழிலதிக மாக்கியிடு—மொத்தலிவை
சாதாக்கியமென்னுஞ் சத்திசிவங்கிரியை
யாதாரஞான வுருவாம். (௨க)

ஆறுறுதத்துவமுஞ் சொன்றேமடைவாக
மாறுமலமிரண்டும் வாசொல்லக்—கூறி
லறியாமையாணவநீ யானசுகதுக்கங்
குறியாவினையென்று கொள். (௨௨)

ஆறாறுதத்துவமு மாணவமும்வல்வினையு
மாறுவருளால் வகுந்துரைத்தீர்—வேறுக
வென்னையெனக்கறியக் காட்டீரிவைகண்டே
னுன்னரியதேசிகனே யுற்று. (௨௩)

நன்றுயுரைக்கக்கே ணல்லசித்தின் முன்னசித்திங்
கொன்றுதுசித்தசித்தை யோராது—நின்றிவற்றை
யன்றேபகுத்தறிவ தான்மாவேயென்றுமறை
குன்றுமலோதுங் குறித்து. (உ௪)

தத்துவங்களாறாறுந் தன்னைத்தானென்றறியா
தெத்தன்மைத்தென்னி லியம்பக்கேள்—சுத்தமா
மாறுசுவையுமறியாது தன்னைத்தான்
கூறிலவையிவைபோற் கொள். (உ௫)

ஆறுசுவையுமருந்தி யவைதன்னை
வேறொருவன்கூறியிடு மேன்மைபோ—லாறாறு
மொன்றொன்றாய்நாடியுணர்ந் தோதியதிலுற்றறிவாய்
நின்றபொருடானே காணீ. (உ௬)

குன்றுவருளாலே கூறினீரொன்வடிவைப்
பொன்றாதுநம்முருவம் போதியீர்—நின்றருக்கன்
கண்ணுக்குக்காட்டுமோ போலேயுனதறிவி
னண்ணியறிவித்திடுவோ நாம். (உ௭)

அன்றியுங்கேளான்மாவா லாய்ந்தறியுமைம்பொறிக
ளின்றியறியா திவையென்ன—நின்றதுபோ
லோவாமலுன்னை யுணர்த்துவோ முன்னறிவின்
மேவாதுமேவி னாமே. (உ௮)

அக்கரங்கட்கெல்லா மகரவுயிர்நின்றாற்போன்
மிக்கவுயிர்க்குயிராய் மேவினோ—மெக்கண்ணு
நில்லாவிடத்துயிர்க்கு நில்லாவறிவென்று
நல்லாகமமோது நாடு. (உ௯)

நற்றவத்தோர்தாங்காண நாதாந்தத்தஞ்செழுத்தா
லுற்றுருவாய்நின்றாட லுள்ளபடி—பெற்றிடநான்
விண்ணார்பொழில்வெண்ணை மெய்கண்டநாதனே
தண்ணாரருளாலே சாற்று. (௩௰)

எட்டுமிரண்டு முருவானலிங்கமே
னட்டம்புதல்வா நவிலக்கேள்—சிட்டன்
சிவாயநமவென்னுந் திருவெழுத்தஞ்சா
லபாயமறநின்றாடு வான். (௩௧)

ஆடும்படிகேணல் லம்பலத்தானையனே
நாடுந்திருவடியி லேநகரங்—கூடு
மகரமுதரம் வளர்தோள்சிகரம்
பகருமுகம் வமுடியப் பார். (௩௨)

சேர்க்குந்துடிசிகரஞ் சிக்கனவவீசுகர
மார்க்கும்யகர மபையகரம்—பார்க்கிலிறைக்
கங்கிநகரமடிக்கீழ் முயலகனார்
தங்குமகரமது தான். (௩௩)

ஓங்காரமேநற் றிருவாசியுற்றதனி
னீங்காவெழுத்தே நிறைசுடரா—மாங்கார
மற்றாரறிவரணி யம்பலத்தானாடலிது
பெற்றார்பிறப்பற்றார் பின். (௩௪)

தோற்றந்துடியதனிற் றோயுந்திதியமைப்பிற்
சாற்றியிடுமங்கியிலே சங்கார—மூற்றமா
யூன்றுமலர்ப்பதத்தே யுற்றதிரோதமுத்தி
நான்றமலர்ப்பதத்தே நாடு. (௩௫)

மாயைதனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாயவொதுக்கியரு டானெடுத்து—நேயத்தா
லானந்தவாரிதியி லான்மாவைத்தானழுத்த
ருனெந்தை யார்பாதந் தான். (௩௬)

மோனந்தமாமுனிவர் மும்மலத்தைமோசித்துத்
தானந்தமானிடத்தே தங்கியிடு—மானந்த
மொண்டருந்திநின்றுடல் காணுமருள்மூர்த்தியாய்க்
கொண்டதிருவம்பலத்தான் கூத்து. (௩௭)

பரையிடமாய்நின்றுமிகு பஞ்சாக்கரத்தா
லுரையுணர்வுக்கெட்டா வொருவன்—வரைமகடான்
காணும்படியே கருணையுருக்கொண்டாடல்
பேணுமவர்க்குண்டோ பிறப்பு. (௩௮)

நாதாந்தநாடகத்தை நன்றுயருள்செய்தீ
ரோதீரொழுத்தஞ்சு முள்ளபடி—தீதறவே
யஞ்செழுத்தீதாகி லழியுமெழுத்தாய்விடுமே
தஞ்சவருட்குருவே சாற்று. (௩௯)

உற்றகுறியழியு மோதுங்காற் பாடைகளிற்
சற்றும்பொருடான் சலியாது—மற்றதுகே
ளீசனருளாவி யெழிலார் திரோதமல
மாசிலெழுத்தஞ்சி னடைவாம். (௪0)

சிவனருளாவி திரோதமலமஞ்சு
மவனெழுத்தஞ்சி னடைவா—மிவனின்று
நம்முதலாயோதிலரு ளடாது நாடுமருட்
சிம்முதலாயோதுநீ சென்று. (௪௧)

அண்ணன்முதலா மழகாரொழுத்தஞ்சு
மெண்ணி லிராப்பகலற் றின்பத்தே—நண்ண
வருளானதுசிவத்தை யாக்குமணுவை
யிருளானவைதீர வின்று. (௪௨)

ஆதிமலமிரண்டு மாதியாயோதினுற்
சேதியாமும்மலமுந் தீர்வாகாப்—போத
மதிப்பரிதாமின்பத்தே வாழலாமாறி
விதிப்படியோ தஞ்செழுத்து மே. (௪௩)

அஞ்செழுத்தேயாகமமு மண்ணலருமறையு
மஞ்செழுத்தேயாதிபுரா ணம்மனைத்து—மஞ்செழுத்தே
யானந்தத்தாண்டவமு மாருறுக்கப்பாலா
மோனந்தவா முத்தியும். (௪௪)

முத்திதனையடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம்வீணை யிவையிற்றி—லொத்த
விரதமணம்வெம்மை யெழினுதம்போல
விரவுவனொன்றோதும் விதி. (௪௫)

தத்துவங்களெல்லாஞ் சகசமாயான்மாவிற்
பெத்தத்தினிற்கின்ற பெற்றிபோன்—முத்திதனிற்
சித்தமலமற்றூர் செறிந்திடுவனொன்றுமறை
சத்தியமா யோதியிடுந் தான். (௪௬)

ஆதவன்றன்சன்னிதியி லம்புலியினூர்சோதி
பேதமறநிற்கின்ற பெற்றிபோ—னுதாந்தத்
தண்ணறிருவடியி லான்மாவணைந்தின்பக்
கண்ணிலழுந்தியிடுங் காண். (௪௭)

சென்றிவன்றானென்றிற் சிவபூரணஞ்சிதையு
மன்றவன்றானென்றுமெனி லன்னியமா—மின்றிரண்டு
மற்றநிலேயேதென்னி லாதித்தனந்தன்விழிக்
குற்றமறநின்றதுபோற் கொள். (சஅ)

வாக்குமனமிறந்த வான்கருணையாளனெடுந்
தாக்கறவேநிற்குந் தனிமுதல்வா—நீக்காப்
பதியினைப்போனித்தம் பசுபாசமென்றாற்
கதியிடத்துமூன்றினையுங் காட்டு. (சகூ)

முத்திதனின்மூன்று முதலுமொழியக்கேள்
சுத்தவனுபோகத்தைத் துய்த்தலணு—மெத்தவே
யின்பங்கொடுத்தலிறை யித்தைவிளைவித்தன்மல
மன்புடனேகண்டுகொ ளப்பா. (ருய)

அப்பாவிம்முத்திக் கழியாதகாரணந்தான்
செப்பாவருளாலே செப்பக்கே—ளொப்பில்
குருலிங்கவேடமெனக் கூறிலிவைகொண்டோர்
கருவொன்றிநில்லார்கள் காண். (ருக)

கற்றுமனம்போற் கசிந்துகசிந்தேயுருகி
யுற்றுசான்லிங்க முயர்வேடம்—பற்றுக
முத்தித்தலைவா முழுமலத்தைமோசித்துப்
பத்திக்கணின்றிடுவர் பார் (ருஉ)

வாழ்ந்தேனருட்கடலே வற்றுப்பவக்கடலில்
வீழ்ந்தேயமுந்தாமன் மெய்கண்டார்—சூழ்ந்துவிடா
வெண்ணேச்சுவேதவன மெய்கண்டநாதனே
யுண்மைத்தவப்பயனே யுற்று. (ருங)

மன்னதிகைவாழு மனவாசகங்கடந்தான்
மின்னனையவாழ்விலுரு மெய்கண்டான்—பன்மறைகள்
வண்மைதருமாகமநூல் வைத்தபொருள்வழுவா
உண்மைவிளக்கஞ் செய்தா னுற்று. (௫௪)

உண்மைவிளக்கமுற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.